**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 99/2015

பெயர் – சுப்பிரமணியன்(பி.வா.சா.1)

நாள் – 01.12.2025

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

1) லட்சுமியாபுரம் கிராமத்தில் மூத்த குடிமக்கள் அதிகம் உள்ளனர் என்றால் சரிதான். அந்த மூத்த குடிமக்களை விசாரித்தால் சுப்புராஜூக்கு பாத்தியப்பட்ட இடமான சர்வே எண்.48/2B, 52/1 ஆகிய இடங்களின் வழியாக தூங்காரெட்டிபட்டி கிராமத்திலிருந்து, லட்சுமியாபுரம் கிராமத்திற்கு சென்று வந்தார்களா என்ற விபரம் தெரியவரும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) சர்வே எண். 48/2B, 52/1 வடக்கே உள்ள நிலத்திற்கு உரிமையாளரான கெக்காலி என்ற சுப்பிரமணியன், செல்லச்சாமி, நாகராஜன், கோவிந்தசாமி ஆகியோர்களை விசாரித்தால் மேற்படி சர்வே எண்ணில் பாதை பயன்படுத்தப்பட்டதா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்ச் சொன்ன நபர்களை என் தரப்பில் நான் விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான். புளூஸ்டார் பயர் ஓர்க்ஸிற்கு கிழக்கே இரண்டு Chlorate அறைகள் உள்ளது என்றால் சரிதான். குளோரைட் ரூமிற்கு கிழக்கே Charcoal ரூம் உள்ளது என்றால் சரிதான். Charcoal ரூமிற்கு மேற்கே எனது நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது நிலத்திற்கு அருகாமையில் லட்சுமி பயர் ஓர்க்ஸ் உள்ளது என்றால் தள்ளியுள்ளது.

3) குளோரைட் ரூம், Charcoal ரூம், லட்சுமி பயர் ஓர்க்ஸ் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர்கள் அய்யச்சாமி தோட்டத்திற்கு கிழக்கேயும், சுந்தரம்பிள்ளையின் தீப்பெட்டி ஆபிசிற்கு செல்லும் பாதையை தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சுப்புராஜூன் மனைவியை சார்ந்தவர்கள் தடுத்ததால் மேற்படி பாதையை பயன்படுத்தி வருகின்றனர். குளோரைட் ரூம், Charcoal ரூம், லட்சுமி பயர் ஓர்க்ஸ் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர்கள் சுப்புராஜூன் மனைவி தடுத்ததை குறித்து காவலர் துறையினரிடமோ, வருவாய் துறையினரிடமோ மனு எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

4) புளூஸ்டார் பயர் ஓர்க்ஸின் உரிமையாளரையும், பதிவு பெற்ற தொழிலாளர்களையும் விசாரித்தால் சுப்புராஜூக்கு பாத்தியப்பட்ட நிலங்களில் இருந்த

சொல்லப்படும் பாதையில் பயன்படுத்தினார்களா, இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். புளூஸ்டார் பயர் ஒர்க்ஸ் உரிமையாளரும் நானும் நல்ல உறவு முறையில் உள்ளோமா என்றால் அருகாமையில் இருந்து வருகிறோம் அவ்வளவு தான். எனக்கும் புளூஸ்டார் பயர் ஒர்க்ஸ் உரிமையாளருக்கும் எவ்வித பகையும் இல்லை என்றால் சரிதான். புளூஸ்டார் பயர் ஒர்க்ஸ் உரிமையாளரை விசாரித்தால் சுப்புராஜூக்கு பாத்தியப்பட்ட நிலங்களில் இருந்த சொல்லப்படும் பாதையில் பயன்படுத்தினார்களா, இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

5) நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ல் வருவாய் துறையினரின் முத்திரை இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ல் சர்வே எண்.48/2B, 52/1 எவ்வளவு வீஸ்தீரணம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் மேற்படி பாதையை குறித்த நீள, அகலங்கள் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகமில்லை. எனது எதிர்வழக்குரையை பார்த்தால் இதுகுறித்து தெரியவரும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் எதிர்வழக்குரையில் பாதையை குறித்து வீஸ்தீரணங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6) தாவா பாதை 1960 கிராம புலவரைபடத்தில் உள்ளது என்றும், தற்போது புழக்கத்தில் இல்லை என்றும் வாதி கூறியதை நான் மறுத்து எனது நிரூபண வாக்குமூலத்திலோ, எதிர்வழக்குரையிலோ குறிப்பிட்டு மறுத்துறைக்கவில்லை என்றால் சரிதான். தாவா பாதையானது சுப்புராஜூக்கு பாத்தியப்பட்டது என்றும், சுமார் 60 ஆண்டுகளாக பயிரிட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல, சுமார் 15 ஆண்டுகளாக தான் பயிரிட்டு வருகிறார்கள்.

7) 15 வருடங்களாக பயிரிட்டு வருகிறார்கள் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் வண்டி பாதை எதுவும் ஒருபோதும் கிடையாது என்றும், அதன் அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர்களோ, லட்சுமியாபுரம் கிராமத்து மக்களோ அந்த பாதையை பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே வண்டி பாதை இருந்திருந்தால் அதற்கு தனியாக சர்வே எண் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

8) காலபோக்கில் ஏற்பட்ட மாற்றங்களால் மேற்படி வண்டி பாதையானது அழிந்துவிட்டது என்றும், மாற்று பாதையுள்ளதால் மக்கள் அதை பயன்படுத்தி வருகின்றனர் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் நியமித்திருந்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் பயர் ஓர்க்ஸ் ஆரம்பிப்பதற்காக சுப்புராஜூடம் இடம் கேட்டதற்கு அவர் மறுத்ததால் நானும், செல்லச்சாமியும், புளூஸ்டார் பயர் ஓர்கஸ் உரிமையாளர் ஆகியோர்கள் இணைந்து வாதிக்கு எதிராக காவல் துறையிலும், வருவாய் துறையிலும் பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல.

9) சர்வே எண்.48/2B, 52/1 ஆகிய நிலங்கள் சுப்புராஜூக்கு பாத்தியப்பட்டது என்றும், ஒருபோதும் வேறு யாருக்கும் பாத்தியப்பட்டது கிடையாது என்றும், அதை பொது பாதை என்று உரிமைகோர யாராலும் முடியாது என்றால் சரியல்ல. 1960ல் உருவாக்கப்பட்ட கிராம புலவரைபடம் தற்போது ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப சீர்திருத்தம் செய்யவில்லை என்பதால் அந்த கிராம புலவரைபடத்தில் உள்ள அமைப்புகள் தற்போது பூமியில் இல்லை என்றால் சரியல்ல, சீர்திருத்த வரைபடம் உள்ளது. மேற்படி சீர்திருத்த வரைபடத்தை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற கேள்வி – சீர்திருத்த வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

10) அய்யச்சாமி தோட்டத்திற்கும், சுந்தரம்பிள்ளை தீப்பெட்டி ஆபிசிற்கும் இடையே உள்ள பாதை நீரோடை இல்லை என்றும், தற்போது பொது மக்கள் உபயோகத்திற்கு தற்போது பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.